**செ.கு.எண் :88** **நாள் : 04.11.2022**

# தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் உள்ள 2152 ஹெக்டேர் பகுதியை திரும்பவும் வனத்துறைக்கே ஒப்படைப்பது குறித்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்களின் அறிக்கை

தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் நிர்வாக நலன் கருதி அந்தக் கழகத்தின் நிலங்களில் சில பகுதிகளை தமிழ்நாடு அரசின் வனத்துறைக்கு வழங்கி சமீபத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டதை குறை கூறி முன்னாள் முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிர்வாக சீர்கேட்டின் காரணமாக இந்த கழகமானது தொடர் நஷ்டத்தை சந்திந்து வந்துள்ள நிலையில், அதனை சீர் செய்வதற்கான முயற்சிகளாக இந்த அரசு பொறுப்பேற்றவுடன்;

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக 01.10.2017 முதல் வழங்கப்படாத நிலுவையிலிருந்த பல்வேறு தொழிலாளர் மற்றும் ஊழியர்களின் ஓய்வூதிய பலன்கள் வழங்கும் பொருட்டு ரூபாய் 29 கோடியே 38 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது. இதனால் 992 ஓய்வுப்பெற்ற தொழிலாளர்கள் மற்றும் 101 ஊழியர்கள் பலன் அடைந்துள்ளனர்.

மேலும் இந்நிறுவனத்தில் மனித மற்றும் நிதி செயல்பாட்டை மேம்படுத்த வணிக பகுப்பாய்வு (Business Analytical Study) மேற்கொள்ளப்படும் என்று அரசு அறிவித்து அதற்கான பணி தற்போது நிறைவுறும் தருவாயில் உள்ளது.

மேலும், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேயிலைத் தோட்டக் கழகத்தின் தேயிலை செடிகள் உள்ள நிலத்தின் நுண்ணூட்ட சக்தியினை அதிகரித்து நிலத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்காக ரூபாய் நான்கு கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதே போல், இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சிறந்த வசதிகள் மற்றும் நிதிப்பயன்களை வழங்குவதற்கு இந்நிறுவனம் சிறப்பாக செயல்படவேண்டும். இதன் மூலம் பணியாளர்களுக்கு சிறந்த குடியிருப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ள இயலும் என்பதை உணர்ந்து, அதற்காக இந்த அரசு அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் சில அடிப்படையான விஷயங்களை எடுத்துக் கூறுவது எனது கடமையாகும்;

இந்திய பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி மற்றும் இலங்கையின் அதிபர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது அரசு தேயிலைத் தோட்டத் திட்டம். அதன்பிறகு இக்கழகம் 1975ஆம் ஆண்டு அரசு நிறுவனமாக மாற்றப்பட்டது. இந்நிறுவனத்தில் ஆரம்பத்தில் சுமார் 12,000 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். தற்போது கள மற்றும்

தொழிற்சாலை தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,850 மட்டுமே. தற்போது தேயிலைத் தோட்டக் கழகத்தின் பரப்பளவு 10,650 ஏக்கர் ஆகும். இந்நிறுவனம் தொடர்ந்து 10 ஆண்டு காலமாக தொடர் நட்டம் அடைந்து வருகிறது. இதில் திரட்டப்பட்ட நட்டம் ரூபாய் 252 கோடி ஆகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1968-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த சீர்மிகு கழகத்தினை, திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட குளறுபடிகளை மூடிமறைக்கவே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். இந்நிறுவனம் தொடங்கப்பட்ட காலம் தொடங்கி 2012ஆம் ஆண்டு வரை அனைத்து தோட்ட நிறுவனங்களும் தோட்டக் கழகத்திடமே குத்தகை அடிப்படையில் இருந்துவந்தன. 2012 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் டேன்டீ நிறுவனத்தின் நிலங்களை வனத்துறைக்கு ஒப்படைக்கும் பணியை முதலில் செய்தது. அது மட்டுமல்ல இன்று தேயிலை கழகத்தின் நிலங்கள் அரசு வனத்துறைக்கு வழங்குவதாக நீலிக் கண்ணீர் வடிக்கும் அவரது ஆட்சிக் காலத்தில், அதாவது 2012 முதல் 2109 வரை சுமார் 4710.5 ஏக்கர் பரப்பளவிலான கழகத்தின் நிலம் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டதை ஏனோ வசதியாக மறந்துவிட்டார்.

உற்பத்தித் திறன் குறைந்த, பணி செய்வதற்கு கடினமான மற்றும் மனித விலங்கு மோதல்கள் நடைபெறும் பகுதிகள் கண்டறியப்பட்டு வனத்துறைக்கு ஒப்படைக்கப்படுகிறது. இதனால் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. இதுவரை எந்தவொரு ஊழியரும் பணியிலிருந்து நிறுத்தப்படவில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் அதிமுக ஆட்சியில் ஏற்பட்ட நிருவாக சீர்கேட்டின் விளைவாக தொடர்ந்து நட்டம் ஏற்பட்ட காரணத்தாலும், கொரானா பாதிப்பின் விளைவாகவும், மிக கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும் தொழிலாளர்களின் நிலைமையை கருத்தில் கொண்டு 10% ஊக்கத் தொகையை வழங்கியுள்ளது நிதி நிலைமை மேம்படும் பட்சத்தில் ஊக்க தொகை உயர்த்தி வழங்கப்படும்.

மேற்காண் பகுதிகளை மீள ஒப்படைப்பதின் காரணமாக நிரந்தர தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் டேன்டீ ஊழியர்களின் வாழ்வாதாரம் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது. டேன்டீ தொழிலாளர்கள் எவரும் குடியிருப்புகளிலிருந்து இதுவரை நிர்வாகத்தால் வெளியேற்றப்படவில்லை. பணியாளர்கள் ஓய்வுப்பெற்ற பின்னரும், பல ஆண்டுகளாக தொழிலாளர்கள் குடியிருப்பில் குடியிருப்போருக்கு பிற தொழிலாளர்களுக்கு குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு அவர்களுக்கு Notice வழங்குவது வழக்கமான நடைமுறையே; முந்தைய ஆட்சியிலும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டது.

நிலங்களின் ஒரு பகுதியை வனத்துறைக்கு வழங்குவதன் மூலம், தேயிலைத் தோட்டப் பகுதிகளை சிறப்பாக மேலாண்மை செய்வதற்கும், தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்தி தரவும் இயலும். இந்த நடவடிக்கையானது, இக்கழகத்தை லாபமீட்டும் ஒன்றாக நடத்துவதற்கும் அதன்மூலம் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வாழ்விட வசதிகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கிடவும் வழிவகுக்கும்.

இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் யாரும் பணியிலிருந்து வெளியேற்றப்படவில்லை அவர்களுக்கு பணி பாதிப்பு ஏதுமில்லை அவர்கள் அனைவருக்கும் உரிய பணிப்பாதுகாப்பு

வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கத் தேவையில்லை. தொழிலாளர்களுக்கோ, பணியாளர்களுக்கோ வேலை இழப்பு ஏதும் இல்லாத சூழலில், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி தொழிலாளர்களிடையே தேவையற்ற பயத்தை உருவாக்க வேண்டாம்.

இத்தேயிலைத் தோட்டக் கழகத்தினை தொடர்ந்து இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு அனைத்து முயற்சிகளும் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கா. ராமச்சந்திரன்**
**வனத்துறை அமைச்சர்**

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in